# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல - 14/2022**

இல 20, வார்ட் பிளேஸ்
கொழும்பு -07

2022 ஒக்டோபர் 04

பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள்
வளாகங்களின் அதிபர்கள்
நிறுவகங்களின் பணிப்பாளர்கள்

**<u>உயர் கல்வி நிறுவகங்கள்/நிறுவகங்களில் உள்ள மாணவர்களுக்கான திறந்த மற்றும் சமமான அணுகல் கொள்கை</u>**

பல உயர் கல்வி நிறுவகங்கள்/நிறுவகங்களில் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகள்/நடத்தைகள் என்பன பதிவுசெய்யப்பட்டுள்ளன, இதன் விளைவாக ஏனைய மாணவர்களின் அடிப்படை உரிமைகளை சக மாணவர்கள் மீறியுள்ளனர் என்பது அவதானிக்கப்பட்டது. அண்மைக்காலமாக இத்தகைய குற்றச் செயற்பாடுகள் ஆயிரக்கணக்கான பட்டப்பயில் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் வகையில் பீடங்கள்/பல்கலைக்கழகங்கள் மூடப்படுவதற்கு வழிவகுத்துள்ளன.

பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் ஒழுங்கமைப்பாளராக இருந்து வருகின்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பாரபட்சமின்றி அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாக்கவும் வளர்ப்பதற்கும் உறுதியளிப்பதன் மூலமாக **அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்குமான "திறந்த அணுகல் கொள்கையை" உறுதியாக கடைப்பிடிப்பதற்கு** ஆலோசனை வழங்க தீர்மானித்தது. எனவே **எந்த பாகுபாடுகளுமின்றி** ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் **முறையாக பதிவுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களும்** தமது பாலினம், இனம், மதம் மற்றும் மூத்த மாணவர்கள் அல்லது பன்முகத்தன்மையின் வேறு ஏதேனும் அடிப்படைகள் மற்றும் அவர்களுடைய துறை அல்லது பீடம் என்பவற்றை பொருட்படுத்தாமல் சிற்றுண்டிச்சாலைகள், விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், நூலகம் மற்றும் ஏனைய பொதுவான வசதிகள் போன்ற **மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளையும் பயன்படுத்துவதற்கு உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.**

எந்தவொரு தகவல்தொடர்பாடல் முறையின் ஊடாகவும் (செய்திகள், சமூக ஊடக பதிவுகள் மூலமான தொடர்பாடல் உள்ளடங்கலாக வாய்வழியாக அல்லது எழுத்து வடிவில் குறிப்பிடுதல்) **எவருக்கேனும் அத்தகைய அணுகுதலை மறுப்பதானது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயலாகும்** என்பதையும் **அத்தகைய செயலானது** 1998 ஆம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடுத்தல் சட்டத்தின் கீழ் **தண்டனைக்குரிய குற்றமாகும்** என்பதையும் **அனைத்து மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் தெரிவிக்குமாறு** இதன் மூலம் உங்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சட்டவிரோதமான செயற்பாடுகள் எந்தவொரு தனிநபராலோ அல்லது மாணவர் குழுவாலோ மேற்கொள்ளப்படுகின்ற வேளையில் மீறுகின்றவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் மூலம் எல்லா வேளைகளிலும் தணிக்க/ஒழிக்க/ விசாரணை செய்வதற்கு பல்கலைக்கழக அதிகாரிகள் பொறுப்பினை கொண்டுள்ளனர். மேலும் ஒருதடவை கண்டறியப்பட்டால்/ அறிக்கையிடப்பட்டால் அத்தகைய சம்பவங்கள் பல்கலைக்கழக ஒழுக்க விதிகளின்படி கையாளப்பட வேண்டும் அத்துடன் கடுமையான சம்பவங்களாயின் நாட்டின் பொதுச் சட்டத்தின் முன் கொண்டு வரப்படும்.

ஒப்பமிடப்பட்டது
சிரேஸ்ட பேரா. சம்பத் அமரதுங்க
தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர் /உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
3. துணைத் தலைவர் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்
5. செயலாளர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
7. பீடங்களின் பீடாதிபதிகள்
8. கணக்காளர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதியாளர்கள்
10. உயர் கல்வி நிறுவனங்கள்/ நிறுவனங்களின் நூலகர்கள்/SAL/AL
11. வளாகங்கள்/ நிறுவகங்களின் பிரதிப் பதிவாளர்கள், சிரேஸ்ட உதவி பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள்
12. வளாகங்கள்/ நிறுவகங்களின் பிரதி நிதியாளர்கள்/ சிரேஸ்ட உதவி நிதியாளர்கள்/ உதவி நிதியாளர்கள்
13. உள்ளக கணக்காய்வாளர்கள் /பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
14. பல்கலைக் கழகங்களின் அரசாங்க கணக்காய்வு கண்காணிப்பாளர்கள்
15. உயர்கல்வி நிறுவகங்களின் சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்கள்
16. தொழிற்சங்கங்களின் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர்- தலைமை அதிபதி

கோவை இல. UGC/CGEE/PO_D-01